# மேல் மாகாண மாகாண சபை – சபைக் கூட்டம்

**2017 மே மாதம் 23 ஆந் திகதி மு.ப. 09.30 க்கு**

## நிகழ்ச்சி நிரல்

I. **தவிசாளரின் அறிவிப்புக்கள்**

II. **அறிக்கைகளையும், ஆவணங்களையும், சமர்ப்பித்தல்**

III. **செயற்குழுக்களின் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்**

IV. **மனுக்கள்**

V. **கேள்விகள்**

**01. கௌரவ ஓ.டப். பிரசன்ன சஞ்ஜீவ உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் , சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு, மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சரிடம் 2017.04.25 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (Íæ/vi (1)17/39)**

அ. பேருவளை பிரதேச சபையின் கணனி பயிற்சி நிலையத்தில் 2015, 2016 ஆம் ஆண்டுகளில் பாடநெறியினைப் பயின்ற பிள்ளைகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

ஆ. அந்தப் பாடநெறியின் கட்டணம் எவ்வளவு ?

இ. அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட நிதி எவ்வளவு ?

ஈ. அவற்றைப் பெற்றுக் கொண்டு கணனி நிலையத்திற்கு வழங்கிய சேவைகள் என்ன ?

உ. 2017 ஆம் ஆண்டில் ஆட்சேர்க்கப்பட்ட பிள்ளைகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

ஊ. பாடநெறிக்கு உரியதாக அந்தப் பிள்ளைகளுக்கு எல்லா புத்தகங்களும் வழங்கப்பட்டு உள்ளனவா ?

எ. தற்போது கல்வி நடவடிக்கை இடம்பெறும் முறை யாது ?

ஏ. ஆசிரியைக்கு வழங்கப்பட்டுள்ள உதவியாளருக்கு கணனி தொடர்பான அறிவு காணப்படுகின்றதா ?

ஐ. 2014, 2015, 2016, 2017 ஆகிய ஆண்டுகளில் கணனி பயிற்சி நிலையத்திற்குப் பொறுப்பாக காணப்பட்ட அலுவலகர் அல்லது அலுவலகர்கள் யார் ?

ஒ. இந்த சொத்துக்களுக்குப் பொறுப்பாக உள்ளவர் யார் ?

ஒ. இதனை 2014 தொடக்கம் 2016 வரை மேற்பார்வை செய்த அலுவலகர் யார் ?

**02. கௌரவ நந்தன பத்மகுமார உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் , ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு, மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சரிடம் 2017.04.25 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (Íæ/vi (1)17/41)**

அ. (i) ஹொரனை நகர சபையின் மூலம் 2014 ஆம் ஆண்டில் நகர சபையின் அதிகாரப் பிரதேசத்தில் வாழும் மக்களின் தேகாரோக்கிய நிலைமையை உயர்த்த மற்றும் நகரப் பெண்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்காக நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்றிட்டங்கள் எவை ?
(ii) அதற்காக செலவு செய்த நிதி எவ்வளவு ?
(iii) செயற்றிட்டம், செயற்றிட்ட அறிக்கை, செலவு செய்த நிதி வெவ்வேறாக எவ்வளவு ?
(iv) அதனை சபைக்கு சமர்ப்பிப்பீர்களா ?

ஆ. (i) இந்த செயற்றிட்டத்திடன் கீழ் நகர எல்லையினுள் பால் விற்பனை நிலையத்தினை நிர்மானித்தீர்களா ?
(ii) நிர்மானிக்கப்பட்ட பால் விற்னை நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவு ?
(iii) எந்த இடங்களில் ?
(iv) அதற்காக செலவு செய்த நிதி வெவ்வேறாக எவ்வளவு ?

இ. (i) இந்தப் பால் விற்பனை நிலையம் தற்போது இயங்குகின்றதா ?
(ii) இல்லையாயின் இதற்குக் காரணம் என்ன ?
(iii) இந்த விற்பனை நிலையத்தினால் சபைக்கு கிடைக்கப் பெற்ற வருமானம் எவ்வளவு ?
(iv) இந்த விற்பனைச் சாலையினை பெற்றுக் கொடுக்கும் போது நகர சபை நடைமுறைப்படுத்திய ஒழுங்கு முறை என்ன ?

**03. கௌரவ ரோஸ் பிரணாந்து உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் , சட்டம் , ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி**

**மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு, மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(ïæ/vi (1)17/44)**

அ. கட்டான பிரதேச சபையின் செயலாளர் களனி பிரதேச சபையில் பதில் கடமையாற்றுவதற்கு நியமிக்கப்பட்டுள்ளாரா ?

ஆ. இச் செயலாளரை இடமாற்றம் செய்து அனுப்பும் படி எவராவது உள்ளூராட்சி ஆணையாளரின் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளாரா ?

இ. கடமைக்கு வருகை தந்த நாள் தொடக்கம் இச் செயலாளரின் சேவைப் பலவீனம் அல்லது குறைபாடு ஒன்று அறிவிக்கப்பட்டுள்ளதா ?

ஈ. அரச பிரமாணங்களுக்கு இணங்க நியமிக்கப்படும் செயலாளர் ஒருவருக்கு ஒரு சேவை நிலையத்தில் எத்தனை வருடங்கள் கடமையாற்ற முடியும் ?

உ. கட்டான பிரதேச சபையின் செயலாளருக்கு அந் நியமனம் எப்போது வழங்கப்பட்டது ?

ஊ. அப் பிரதேச சபையின் செயலாளரின் கால எல்லை நிறைவு பெறாத விடத்து அவரை இடமாற்றம் செய்வதற்கான அடிப்படை ஒன்று காணப்படுகின்றதா ?

**04.** **கௌரவ சரத் பதிரண உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் , சட்டம் , ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு, மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(ïæ/vi (1)17/45)**

அ. ஹோமாகமை பிரதேச சபையின் அதிகார பிரதேசத்தின் "சேவா பியச" என்ற பெயரில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டடங்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

ஆ. அந்த ஒரு கட்டடம் ஒன்றினை நிர்மானிப்பதற்காக செலவு செய்யப்பட்டுள்ள நிதியை வெவ்வேறாக இச் சபைக்கு முன்வைப்பீர்களா ?

இ. இக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு எவ் வருடத்தில் ஒப்படைக்கப்பட்டது ?

ஈ. இக் கட்டடங்களுள் இது வரை பாவனைக்கு எடுக்கப்படாத கட்டடங்கள் காணப்படுகின்றனவா ? அவற்றின் எண்ணிக்கை எவ்வளவு ?

உ. அக் கட்டடங்களில் பல குறைபாடுகள் காணப்படுகின்றன என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஊ. அக் குறைபாடுகள் தொடர்பாக மற்றும் அக் குறைபாடுகளை சீர் செய்வதற்கு நீங்கள் எடுக்கும் நடவடிக்கை என்ன ?

## VI. வருகை தராமல் இருக்க அங்கீகாரம் பெறும் யோசனை

## VII. அமைச்சுக்களின் அறிவிப்புக்களும்/அமைச்சர்களின் தகவல்களும்

## VIII. தனிப்பட்ட தெளிவுபடுத்தல்கள்

## IX. சபை நடவடிக்கை I

**கௌரவ சபை நடவடிக்கை தொடர்பான அமைச்சரினால் சமர்ப்பிக்கப்படுவதற்கு :**

**பிரேரணை :**

"இன்றைய தினம் பொது நடவடிக்கை முன்னுரிமை பெற வேண்டும்."

### சபை நடவடிக்கை II

**கௌரவ சபை நடவடிக்கை தொடர்பான அமைச்சரினால் சமர்ப்பிக்கப்படுவதற்கு :**

**பிரேரணை :**

"2017.04.25 ஆந் திகதி மாகாண சபைக் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டதும் 2017.02.07 ஆந் திகதி சபையில் நிறைவேற்றப்பட்டதுமான 2017 ஆம் ஆண்டின் முதலாம் இலக்க மேல் மாகாணத்தின் தகவல் தொழிநுட்ப வள அபிவிருத்தி அதிகார சபை நியதிச் சட்டம் தொடர்பாக கௌரவ ஆளுநரினால் அரசியல் அமைப்பின் 154 ஏ (2) உறுப்புரையின் கீழ் அவருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு இணங்க GOS/ADM/4/8/69 ஆம் இலக்க 2017.04.07 ஆந் திகதி செய்தியின் மூலம் சிபாரிசு செய்யப்படும் திருத்தங்களை முன்வைப்பது சிறந்ததா என்பதை மேல் மாகாண சபையில் மீண்டும் ஆராய்ந்து பார்க்குமாறு அறிவிக்கப்பட்டுள்ள படியாலும் அதற்கிணங்கிய வகையில் இது தொடர்பாக சட்ட நியதிச் சட்ட செயற்குழுவின் கருத்து தொடர்பாக கவனத்தில் கொண்டு 2017.04.26 ஆந் திகதி சபை நடவடிக்கை செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட படி இன்றைய தினம் நிகழ்ச்சி நிரலில் பொது நடவடிக்கையின் இலக்கம் 01 ஆம் விடயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளுக்கு நடவடிக்கை ஒழுங்கு விதி 57 (1), 57(3) மற்றும் 57(4) ஆகிய வற்றில்

குறிப்பிடப்படும் ஏற்பாடுகளினால் எந்தவொரு தடையும் ஏற்படக் கூடாது எனக் கருதி செயற்படுவதற்கு இம் மாகாண சபை இணங்குகின்றது."

## X. தனிப்பட்ட உறுப்பினர்களின் நடவடிக்கைகள்

### 01. கௌரவ கித்சிறி கஹடபிடிய அவர்கள்

உலகமயமாக்கத்தினுள் ஒருங்கிணைந்த நாட்டினுள் சர்வதேச தொடர்புகளைப் பேணி நாட்டின் எதிர்காலத்தை பாதுகாப்பதற்கு மேன்மைதங்கிய ஜனாதிபதியும் கௌரவ பிரதம மந்திரியும் ஒன்று சேர்ந்து நல்லாட்சி அரசு ஒன்றை உருவாக்கி நாட்டின், மக்களுக்காக மேற்கொள்ளும் பணியிற்கு மேல் மாகாண மாகாண சபை தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது. **(பி/vi(1)16/03)**

{ 2017.03.21 ஆந் திகதி சபைக் கூட்டத்துடன் தொடர்புடையது }

### 02. கௌரவ பீ.டி.அபேரத்ன அவர்கள்

களுத்துறை மாவட்டத்தின் அகலவத்தை தேர்தல் தொகுதியின், அகலவத்தை பிரதேச செயலாளர் பிரிவின் ரத்மலே கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள "தம்பதொல அல்ல" உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் தொடர்ச்சியாக வரும் மிகவும் அழகான சுற்றாடல் ஒனறில் காணப்படும் நீர்வீழ்ச்சி ஒன்றாகும்.

இவ் இடத்திற்கு உல்லாசப் பயணிகளுக்குத் தேவையான வசதிகளை வழங்கி, அபிவிருத்தி செய்து மேல் மாகாண சுற்றுலாத் துறை அமைச்சின் கீழ் பேணிச் செல்ல வேண்டும் என இம் மேல் மாகாண மாகாண சபை கருதுகின்றது. **(பி/vi(1)16/04)**

### 03. கௌரவ லலித் எல்லாவல அவர்கள்

மேல் மாகாணத்தினுள் பதிவு செய்துள்ள முன்பள்ளி அபிவிருத்தி நிலையங்களுக்கு மேலதிகமாக ஒழுங்கற்ற முறையில் நடாத்தப்படும் முன்பள்ளிகளை ஒழுங்குபடுத்தி பதிவு செய்யுமாறும் இது தொடர்பாக விஷேட அறிவுள்ள ஒழுங்கான ஆலோசனைக் குழுவொன்றை நியமிக்குமாறும் பதிவு செய்யப்பட்டுள்ள முன் பள்ளிகளின் ஆசிரியர்களுக்கு மாதாந்தம் ரூபா 5000/- படி ஒன்றினை செலுத்த நடவடிக்கை எடுக்குமாறும் இந்த மேல் மாகாண மாகாண சபை கருதுகின்றது. **(பி/vi(1)17/01)**

## XI. பொது நடவடிக்கை

### 01. கௌரவ கல்வி, கலாச்சாரம் மற்றும் கலை நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம் மற்றும் தகவல் தொழிநுட்பம் தொடர்பான அமைச்சர் (மே.மா)

**பிரேரணை :**

**2017 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க மேல் மாகாணத்தின்**
**<u>தகவல் தொழிநுட்ப வள அபிவிருத்தி அதிகார சபை நியதிச் சட்டம்</u>**

"2017 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க மேல் மாகாணத்தின் தகவல் தொழிநுட்ப வள அபிவிருத்தி அதிகார சபை நியதிச் சட்டம் தொடர்பாக அரசியல் அமைப்பின் 154 ஏ (2) உப உறுப்புரைக்கு இணங்க ஆளுநரினால் அனுப்பப்பட்ட GOS/ADM/4/8/69 ஆம் இலக்க 2017.04.07 ஆந் திகதி செய்தி தொடர்பாக கருத்தில் கொண்டு நியதிச் சட்டத்தினை மீண்டும் ஆராய்ந்து பார்த்து திருத்தங்களுடன் அல்லது திருத்தங்களின்றி இந் நியதிச் சட்டத்தினை நிறைவேற்றி கௌரவ ஆளுநரின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கு ஏற்ற முறையில் செயற்படல் வேண்டும்.

**02.** **கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் , ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத் துறை தொடர்பான அமைச்சர் (மே.மா)**

**பிரேரணை** :

"**மேல் மாகாணத்தின் மாகாண சபையின் 2017 இலக்க ............ ஆகிய உள்ளூராட்சி நிறுவனத்தின் அதிகாரங்கள் செயற்படுத்தும் நியதிச் சட்டம்**"

**[**முதலாம் முறை வாசித்தல்**]**

"மேல் மகாணத்தின் உள்ளூராட்சி அதிகார பிரதேசத்தினுள் உள்ளூராட்சி நிறுவனங்களில் கடமை தொடர்பாக எந்தவொரு அபிவிருத்தி செயற்பாடு ஒன்று தொடர்பாக ஆயத்தமாகும் காணி மற்றும் காணி உப பிரிவுகளுக்கு தொடர்பாக திட்டமிடல்கள், சகல நிர்மாண திட்டங்கள் அனுமதித்தலும் அது தொடர்பாக வீடு மற்றும் நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தில் ஏற்பாடு மற்றும் நகர மற்றும் கிராம நிர்மாண கட்டளைச் சட்டத்தில் ஏற்பாடு நடைமுறைப்படுத்துதல் தொடர்பாகவும் அதற்கு இடைநேர்விளைவான விடயங்கள் தொடர்பாக உள்ளூராட்சி நிறுவனத்திற்கு அதிகாரங்கள் தீர்மானம் செய்தல் தொடர்பாகவும் ஏற்பாடு உருவாக்குதல் தொடர்பான நியதிச் சட்டமாகும்

இந்த நியதிச் சட்டம் 1982 இலக்க 4 ஆகிய நகர அபிவிருத்தி அதிகார சபை (திருத்தம்) சட்டத்தின் திருத்தப்பட்ட தேசிய அரச சபையில் 1978 இலக்க 41 ஆகிய நகர அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் 23 ஆவது பிரிவில் (1), (2), (3) மற்றும் (4) ஆவது உப பிரிவுக்கும் பொருத்தமற்றதாகும்.

## XII. சபை ஒத்திவைப்பு

கே.எச்.டி.கே. சமரக்கோன்
செயலாளர்,
மேல் மாகாண மாகாண சபை

2017.04.26 ஆந் திகதி
சபைச் செயலாளர் காரியாலயம் (மே.மா)
மேல் மாகாண மாகாண சபை,
5ஆம் மாடி, Bஅலகு,
செத்சிறிபாய,
பத்தரமுல்ல.